



Metro லீடர்
மெட்ரோ LEADER
தமிழ் பேசும் மக்கள் 'நமக்கான நாளிதழ்'




லீடர்: 04 | இதழ் - 273 | 31.08.2024 | பக்கங்கள்: 11 | editorml21@gmail.com | விலை: 75/-

# ரணில் சூழ்ச்சி

## அம்பலப்படுத்தினார் விமல் வீரவங்ச எம்.பி!



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அரசியல் சூழ்ச்சி மூலம் பதவியில் இருக்கச் சதி செய்வதாக குற்றம் சாட்டிய பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச, இது 2022 மே 09 ஆம் திகதி இடம்பெற்ற சம்பவங்களைப் போன்று வன்முறைக்கு வழி வகுக்கும் என எச்சரித்துள்ளார்.

02 ⏭



## எமது அரசாங்கம் சர்வதேச சந்தைக்கு எரிபொருளை விற்பனை செய்யும்



-அநுர குமார திஸாநாயக்க-

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் கீழ் திருகோணமலையில் 99 எண்ணெய் தாங்கிகளைப் பயன்படுத்தி எரிபொருள் சுத்திகரிப்பு நிலையம் ஆரம்பிக்கப்படும் என்றும் சுத்திகரிக்கப்பட்ட எரிபொருள் சர்வதேச சந்தையில் விற்பனை செய்யப்படும் என்றும் அக்கட்சியின்

02 ⏭

# வாயை மூடு!

## மத்திய வங்கி ஆளுநருக்கு அநுர தரப்பு எச்சரிக்கை



ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்கவின் பணிப்புரையின் பேரில் மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்க பொருளாதாரம் தொடர்பில் சில கருத்துக்களை வெளி யிட்டு வருவதாக தேசிய மக்கள் சக்தி குற்றம் சுமத்தியுள்ளது.

02 ⏭

## செய்தியில் உண்மையில்லை



-பாலித ரங்கே பண்டார-

ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் பதவியில் இருந்து தாம் நீக்கப்பட்டுள்ளதாக ஊடகங்களில் வெளியாகும் செய்திகளில் உண்மையில்லை

02 ⏭



இலங்கைக்கு விஜயம் செய்துள்ள இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தொவால் மற்றும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க ஆகியோ ருக்கு இடையிலான சந்திப்பு நேற்று (30) முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்றது.



இலங்கையைச் சுற்றி 45 நாட்களில் 1500 கிலோமீற்றர் தூரம் நடந்து சாதனை படைத்த பேருவளையைச் சேர்ந்த சஹ்மி ஷஹீத்தை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச ஆகியோர் சந்தித்து தங்களது வாழ்த்துக்களை தெரிவித்தனர்.

## பாஸ்போர்ட் வரிசைக்கு முற்றுப்புள்ளி?

02 ⏭

## ரணில் சூழ்ச்சி...

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச ஆகியோரை ஐக்கியப்படுத்தும் முயற்சியில் அமெரிக்காவும் இலங்கைக்கான தனது தூதுவரும் தொடர்ந்து ஈடுபட்டு வருவதாக ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய பாராளுமன்ற உறுப்பினர் தெரிவித்தார்.

சில காரணங்களால் சஜித் பிரேமதாச இதற்கு இணங்கவில்லை. ஆனால் ரணில் விக்கிரமசிங்க சஜித்தை அம்பலப்படுத்துகிறார். தலதா நீக்கப்பட்டார், மேலும் குறைந்தது ஐந்து அல்லது ஆறு கட்சிகள் விலகும் என்று கேள்விப்படுகிறேன். இதனால் யார் பலவீனமடைவார்கள்?" என அண்மையில் ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் தலதா அத்துகோரள பாராளுமன்றத்தில் இருந்து வெளியேறியமை தொடர்பில் வீரவன்ச கேள்வி எழுப்பினார்.

கட்சித் தாவல்கள் சஜித் பிரேமதாசாவை பலவீனமான நிலைக்கு தள்ளும் என்றும், அது மூன்றாம் தரப்புக்கு அது உதவும் என்றும் அவர் கூறினார்.

இந்த குறிப்பிட்ட மூன்றாம் தரப்பினர் தேர்தலுக்கு முன்னர் வன்முறையை கட்டவிழ்த்து விடுவதற்கு கூட்டுச் சேர்ந்து கொண்டிருப்பதாகவும், இது இறுதியில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை அரசியலமைப்பின் சில விதிகளின் கீழ் பதவியில் நீடிக்க உதவும் என்றும் பாராளுமன்ற உறுப்பினர் குற்றம் சாட்டினார்.

அடுத்த ஜனாதிபதி பதவியேற்கும் வரை தற்போதைய ஜனாதிபதி பதவியில் இருப்பார் என அரசியல் சாசனம் கூறுகிறது எனவும் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

## வாயை மூடு...

மத்திய வங்கியின் ஆளுநர் ஒரு விடய நிபுணர் என்ற வகையில் அரசியல்வாதிகளுக்குத் தேவையான அறிக்கைகளை வெளியிடுவதை தவிர்க்க வேண்டும் என அக்கட்சியின் தேசிய செயற்குழு உறுப்பினர் நலிந்த ஜயதிஸ்ஸ சுட்டிக்காட்டியுள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்தின் உடன்படிக்கைகளில் சீர்திருத்தம் மேற்கொள்ளப்பட்டால் நாடு எதிர் விளைவுகளை சந்திக்க நேரிடும் என மத்திய வங்கியின் மிகைப்படுத்தப்பட்ட அறிக்கை தொடர்பில் ஊடகவியலாளர் ஒருவரின் கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.நாட்டின் பொருளாதாரத்தை வங்குரோத்து செய்த குற்றச்சாட்டில் மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநரை குற்றவாளி என உச்ச நீதிமன்றம் கண்டறிந்ததை நினைவுகூர்ந்த ஜயதிஸ்ஸ, மத்திய வங்கி ஆளுநர் அரசியல்வாதிகள் சொல்வதைக் கூறக்கூடாது, பாட அறிவைப் பயன்படுத்தி நடைமுறை விஷயங்களை மட்டுமே சொல்ல வேண்டும் என்றார்.

## எமது அரசாங்கம் சர்வதேச சந்தைக்கு...

ஜனாதிபதி வேட்பாளர் அநுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"திருகோணமலையில் 99 எண்ணெய் தாங்கிகள் உள்ளன. ஒரு தொட்டியில் 10,000 மெட்ரிக் டன் சேமிக்க முடியும். தோராயமாக பத்து லட்சம் மெட்ரிக் டன் சேமிக்க முடியும். எண்ணெய் நமக்கு அதிகம். எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தைத் தொடங்கி, எண்ணெயைச் சுத்திகரித்து, சேமித்து, அருகிலுள்ள துறைமுகத்திலிருந்து சந்தைக்கு அனுப்பலாம்.

அந்தப் பணியைச் செய்யக்கூடிய சர்வதேச நிறுவனமும், எண்ணெய்க் கூட்டுத்தாபனமும் ஒன்றிணைந்து திருகோணமலையில் உள்ள எண்ணெய் தாங்கி வளாகத்தை புத்துயிர் அளிக்கும் என்றார்.

## செய்தியில் உண்மையில்லை...

என பாலித ரங்கே பண்டார தெரிவித்துள்ளார்.

கட்சியின் தலைமையகமான சிறிகொத்தவில் நேற்று (30) செய்தியாளர் மாநாட்டை நடத்திய அவர், கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க பதவி நீக்கம் செய்யப்பட்டதாக உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படவில்லை.

தான் நீக்கப்பட்டதாக ஊடகங்களில் வெளியான செய்திகள் குறித்து கருத்து தெரிவித்துள்ள அவர், அனைத்து குற்றச்சாட்டுகளுக்கும் விரைவில் பதிலிளிப்பேன் என்று கூறியுள்ளார்.

"பொதுச்செயலாளர் பதவியில் இருந்து நான் இன்னும் உத்தியோகபூர்வமாக இராஜினாமா செய்யவில்லை. மேலும் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க பொதுச்செயலாளர் பதவியில் இருந்து நீக்கப்பட்டதாக உத்தியோகபூர்வ அறிவிப்பை வெளியிடவில்லை. இதற்கெல்லாம் பதில் சொல்வேன். பொதுச்செயலாளர் பதவியில் இருந்து தன்னை நீக்கினாலும் நான் ஒரு யூ.என்.பிக்காரன். பின்னர் சந்திப்போம்.

## பாஸ்போர்ட் வரிசைக்கு...

குடிவரவு குடியகல்வு திணைக்கள வளாகத்தில் பல நாட்களாக காணப்பட்ட நெரிசல் நேற்று (30) முற்றாக நீங்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றன.

எவ்வித நெரிசலும் இல்லாமல், நேற்று தான் வெளிநாட்டு கடவுச்சீட்டை பெற்றுக் கொள்ள முடிந்ததாக மக்கள் கூறுகின்றனர்.

வெளிநாட்டு கடவுச்சீட்டு வழங்குவதில் ஏற்பட்ட தாமதம் காரணமாக குடிவரவு குடியகல்வு திணைக்கள வளாகத்தை சுற்றி பல நாட்களாக நீண்ட வரிசைகள் காணப்பட்டன.

ஒரு நாளைக்கு ஆயிரம் அனுமதி சீட்டு வழங்க அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

## ஜனாதிபதிக்கும் அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா சபைக்கும் இடையே சந்திப்பு







கடந்த கொரோனா வைரஸ் பரவலின் போது மரணித்த முஸ்லிம்கள் மற்றும் ஏனைய மதத்தினரின் உடல்களை தகனம் செய்வதற்கு அரசாங்கத்திற்கு பரிந்துரைத்த தரப்பினரின் பொறுப்புக் கூறல் தொடர்பில் ஆராய்வதற்காக ஏனைய கட்சித் தலைவர்களுடன் கலந்தாலோசித்து பாராளுமன்ற தெரிவுக்குழு ஒன்றை நியமிப்பதாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா நிறைவேற்றுக் குழுவுடன் (27) மாலை நடைபெற்ற சந்திப்பில் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு பதிலளிக்கும் போதே ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டார்.

கொழும்பு மாளிகாவத்தையில் அமைந்துள்ள அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா தலைமையகத்திற்குச் சென்ற ஜனாதிபதி, அதன் தலைவர் அஷ் - ஷெய்க் எம்.ஐ.எம் . ரிஸ்வி மற்றும் நிறைவேற்றுக் குழு உறுப்பினர்களைச் சந்தித்து கலந்துரையாடினார்.

உலமா சபையின் பொதுச் செயலாளர் அஷ்-ஷேக் அக்ரம் நூராமித், பொருளாளர் அஷ்-ஷேக் ஏ.ஏ.அஹமட் உள்ளிட்ட நிறைவேற்றுக் குழு உறுப்பினர்கள் இந்த சந்திப்பில் கலந்து கொண்டனர்.

நாட்டின் பொருளாதார மீட்சி மற்றும் எதிர்காலத் திட்டங்கள் குறித்து மௌலவிமார்களுக்கு எடுத்துரைத்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, அந்த வேலைதிட்டத்தை முன்னெடுத்துச் செல்வதற்கான ஆணையை கோருவதற்காகவே இந்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதாகவும் தெரிவித்தார்.

தேர்தல் நடவடிக்கைகளை ஆரம்பித்ததன் பின்னர் மகாநாயக்க தேரர்கள் மற்றும் ஏனைய மதத் தலைவர்களைச் சந்தித்து ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் பெற்றுக் கொண்டதாகத் தெரிவித்த ஜனாதிபதி, அனைத்து மதங்களையும் சமமாக நடத்துவதற்குத் தான் அர்ப்பணிப்புடன் இருப்பதாகவும் தெரிவித்தார்.

மேலும் பலஸ்தீன மோதல்கள் தொடர்பில் கருத்து தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, பலஸ்தீன நாடு தொடர்பான இலங்கை அரசாங்கத்தின் நிலைப்பாட்டில் எந்தவித மாற்றமும் இல்லை எனவும் அதற்காகத்தான் தொடர்ந்து குரல் கொடுப்பதாகவும் தெரிவித்தார்.

Metro லீடர் மெட்ரோ LEADER
தமிழ் பேசும் மக்கள் 'நமக்கான நாளிதழ்'

Metro Media Network
502, Main Street, Sainthamaruthu- 14.
Sri Lanka.
Ads: 0779007738
News: 0772539298
Circulation: 0766735454

# கனடாவில் குடியேற முடியாது: கனேடிய பிரதமரின் அதிரடி அறிவிப்பு

கனடாவுக்குக் குடிபெயரும் தற்காலிக வெளிநாட்டு ஊழியர்களின் எண்ணிக்கையைக் குறைக்க அந்நாட்டு அரசு முடிவெடுத்துள்ளது.

கனடாவில் குறைந்த வருமானம் கொண்ட வேலைகளுக்காக தற்காலிகமாக குடிபெயரும் வெளிநாட்டவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதனால், கனேடியர்களுக்கு வேலை வாய்ப்புகள் குறைந்துள்ளதாக குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன. எனவே கனேடிய நாட்டவர்களுக்கு முக்கியமாக இளைஞர்களுக்கு அதிக வேலைவாய்ப்பை ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தில் இந்த முடிவை அரசு எடுத்துள்ளதாக அந்நாட்டு பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ அண்மையில் தெரிவித்தார்.

தொழிலாளர் பற்றாக்குறையை நிரப்பவும், குறைந்த ஊதியத்தில் வெளிநாட்டவர்கள் வேலைக்கு வருவார்கள் என்பதாலும் கடந்த 2022 ஆம் ஆண்டில் கொண்டுவரப்பட்ட தற்காலிக வெளிநாட்டு பணியாளர் திட்டத்தின் கீழ் அதிகமானோர் அங்கு



தற்காலிகமாக குடியேறி வருகின்றனர்.

இதன் மூலம் கடந்த ஆண்டுகளில் மக்கள் தொகை அதிகரித்து, வீட்டு வசதி மற்றும் ஏனைய சேவைகளுக்கு தட்டுப்பாடு ஏற்படும் நிலை உருவாகும் என்ற நோக்கத்தில் அந்த திட்டத்தில் திருத்தம் செய்து குடிபெயர்வோரை தடுக்கும் தீர்மானத்தின் கீழ் இம் முடிவை அரசு எடுத்துள்ளது.

இதைத்தவிர்த்து நிரந்தர குடியுரிமை பெற்ற வெளிநாட்ட வர்களின் எண்ணிக்கையையும் குறைக்க கனேடிய அரசு திட்டமிட்டு வருவதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

## வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு தீர்வு கிடைக்குமா?

சர்வதேச வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் தினம் ஆகஸ்ட் 30-ஆம் தேதி அனுஷ்டிக்கப்படுகின்ற நிலையில், இலங்கையிலும் இந்த தினத்தை பலர் அனுஷ்டிக்கின்றனர்.

குறிப்பாக இலங்கையில் இடம்பெற்ற 3 தசாப்த கால யுத்தம் மற்றும் அதற்கு பின்னரான காலத்தில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்ப உறுப்பினர்களே இவ்வாறு இந்த தினத்தை அனுஷ்டித்து வருகின்றனர்.

இறுதிக் கட்ட யுத்தம் மற்றும் அதனுடன் தொடர்புடைய காலப் பகுதியில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள், இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் அதிகளவில் காணப்படுவதுடன், ஏனைய மாகாணங்களிலும் காணப்படுகின்றனர்.

இந்த நிலையில், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் தொடர் சுழற்சி முறையிலான போராட்டங்கள் இன்றும் நடந்து வருகின்றது.

இவ்வாறான போராட்டங்கள் தொடர்ந்தாலும், காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரத்தில் இன்றும் தேடல்கள் தொடர்ந்த வண்ணமே காணப்படுகின்றன.

இது தொடர்பில் காலத்திற்கு காலம் பல்வேறு முயற்சிகள், சர்வதேச விசாரணை போன்ற விடயங்கள் முன்னெடுக்கப் பட்டன. இருந்த போதிலும் இறுதியான எந்தவொரு தீர்வும் கிடைக்கப் பெறவில்லை.

இந்த பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு பெற்றுக் கொடுப்பது அரசாங்கத்தின் தார்மீக பொறுப்பாகும்.

## சட்டவிரோத செயற்பாடுகளுக்கு உதவிய டெலிகிராம்

டெலிகிராம் தலைமை செயல் அதிகாரி(CEO) பாவெல் துரோவ் பிரான்ஸ் பொலிஸாரால் கைது செய்யப் பட்டுள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.






அண்மையில் அசர்பைஜானில் இருந்து நாடு திரும்பியபோது பிரான்ஸ் தலைநகர் பாரிஸுக்கு அருகே உள்ள போர்கெட் விமான நிலையத்தில் வைத்து பாவெல் துரோவ் (CEO) கைது செய்யப்பட்டார்.

தீவிரவாத இயக்கங்களுக்குத் துணைபோவது, போதைப் பொருள் விநியோகம், சிறுவர்களுக்கு எதிரான குற்றங்கள் உள்ளிட்ட சட்டவிரோதமான செயல்களில் ஈடுபடுவதற்கு டெலிகிராம் செயலி அதிகளவில் உதவுவதாகவும், அதனை டெலிகிராம் நிறுவனம் எந்த தடையுமின்றி அனுமதித்து வருவதாகவும் குற்றச் சாட்டுகளை முன்வைத்து டெலிகிராம் நிறுவனத்தின் CEO கைது செய்யப்பட்டதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

39 வயதான பாவெல் துரோவ் டெலிகிராம் தொடர்பான குற்றங்களுக்காக பிடியாணையின் கீழ் கைது செய்யப்பட்டதாக கூறப்படுகிறது.

டெலிகிராம் என்பது ரஷ்யா, உக்ரைன் மற்றும் முன்னாள் சோவியத் யூனியனின் மாநிலங்களில் பிரபலமான பயன்பாட்டு அப் ஆகும்.

பேஸ்புக், யூடியூப், வாட்ஸ்அப், இன்ஸ்டாகிராம், டிக்டோக் மற்றும் வெச்சாட் ஆகியவற்றுக்குப் பிறகு டெலிகிராம் ஒரு முக்கிய சமூக ஊடக தளமாக தரவரிசைப்படுத்தப்பட்டுள்ளது.

துரோவ் 2013 இல் டெலிகிராமை நிறுவினார் மற்றும் அரசாங்க கோரிக்கை களுக்கு இணங்க மறுத்ததால் 2014 இல் ரஷ்யாவை விட்டு வெளியேறினார்.

## 10 ஆண்டுகளுக்கு பிறகு விலகிய மர்மம்




மலேசியா எயார்லைன்ஸ் நிறுவனத்தின் எம்எச்-370 என்ற பயணிகள் விமானம் கடந்த 2014ஆம் ஆண்டு மார்ச் 8ஆம் திகதி கோலாலம்பூரிலிருந்து சீனா நோக்கி பயணித்தபோது காணாமல் போனது.

227 பயணிகள், 12 விமான ஊழியர்கள் என 239 பேர் இருந்த நிலையில் விமானம் இந்திய பெருங்கடலின் தெற்கு பகுதியில் 7ஆவது வளைவுக்கு அருகில் விழுந்திருக்கலாம் என்று அதிகாரிகள் கருதுகின்றனர். கிட்டத்தட்ட மூன்று ஆண்டுகளாக, சுமார் 120,000 சதுர கிலோ மீற்றர் பரப்பளவில் தேடியும், விமானம் எந்த இடத்தில் விழுந்தது என்பதை கண்டறிய முடியவில்லை. இதனால் 2017இல் தேடும் பணி நிறுத்தப்பட்டது.

ஏற்கனவே நடந்த தேடுதல் பணியின் போது, ஆபிரிக்க கடற்கரைகள் மற்றும் அதனை ஒட்டியுள்ள இந்தியப் பெருங்கடல் தீவுகளில் சேகரிக்கப்பட்ட குப்பைகளின் பல துண்டுகள் எம்எச்-370 விமானத்தின் துண்டுகள் என உறுதிப்படுத்தப்பட்டன. ஆனால், விமானத்தின் பெரும்பகுதி கண்டுபிடிக்கப் படவில்லை. எனவே, மாயமான விமானம் குறித்த மர்மம் நீடித்தது.

எம்எச்-370 விமானம் காணாமல் போய் 10 ஆண்டுகளை கடந்த நிலையில், விமானம் விழுந்து மூழ்கிய சரியான இடத்தை கண்டுபிடித்ததாக அவுஸ்திரேலிய விஞ்ஞானி வின்சென்ட் லைன் சமீபத்தில் தெரிவித்துள்ளார்.

டாஸ்மேனியா பல்கலைக்கழகத்தின் கடல் மற்றும் அண்டார்டிக் ஆய்வு நிறுவன விஞ்ஞானியான வின்சென்ட் லைன் "அறிவியலால் எம்எச்-370 மர்மம் விலகியது" என்ற தலைப்பில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், இந்தியப் பெருங்கடலில் 6,000 மீற்றர் (சுமார் 20,000 அடி) ஆழமான பள்ளத்தில் (புரோக்கன் ரிட்ஜ்) விமானத்தை விழச்செய்திருப்பதாக தெரிவித்துள்ளார். அவர் தனது ஆய்வு தொடர்பான அறிக்கையையும் விளக்கப் படத்தையும் வெளியிட் டுள்ளமை குறிப்பிடத்தக்கது

## பிரித்தானியாவில் வீதி நடுவில் விழுந்த விமானத்தால் பரபரப்பு

பிரித்தானியாவின் வீதி ஒன்றில் சிறிய ரக விமானம் ஒன்று விழுந்து விபத்துக்குள்ளான சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. பிரித்தானியாவின் குளோசெஸ்டர்ஷைர் பகுதியில் குறித்த விபத்து இடம்பெற்றுள்ளது.





இதனையடுத்து, அப்பகுதியில், வீதிகள் மூடப்பட்டதுடன் போக்குவரத்தும் துண்டிக்கப்பட்டது. குறித்த சிறிய ரக விமானத்தை உடனடியாக தரையிறக்க முற்பட்டதாலேயே இந்த விபத்து சம்பவித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. விமானத்தில் இருந்த இருவரும் உடனடியாக மீட்கப்பட்டு அருகிலுள்ள வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டுள்ளனர்.மேலும், இந்த விபத்தில் வேறு எந்த வாகனங்களும் பாதிக்கப்படவில்லை என்றும் கூறப்பட்டுள்ளது.

editorml21@gmail.com

# சிஸ்டம் சேன்ஞ்சை செய்து காட்டியவர் சஜித் பிரேமதாச

## பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் தெரிவிப்பு

(எம்.ஜே.எம். சஜீத்)



சிஸ்டம் சேன்ஞ்சை செய்து காட்டியவர் சஜித் பிரேமதாச என பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் தெரிவித்தார்.

கந்தளாய் பிரதேசத்தில் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாச பங்கு கொண்ட பிரச்சார கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்தும் உரையாற்றிய அவர், நாம் வரலாற்றில் பல எதிர்கட்சி தலைவர்களை கண்டுள்ளோம். அவர்கள் பாராளுமன்றத்துக்கு உள்ளேயும் வெளியேயும் அரசாங்கத்தை விமர்ச்சிக்கவும் அரசாங்கத்தை கவிழ்க்கவும் என்ன செய்யலாம் என யோசித்தே நாம் கண்டுள்ளோம். ஆனால் வரலாற்றில் முதன் முறையாக அந்த சிஸ்டத்தை மாற்றியவர் சஜித் பிரேமதாச மட்டுமே. கொவிட் பிரச்சினையாக இருந்தாலும் சரி பொருளாதார நெருக்கடியாக இருந்தாலும் சரி அவர் விமர்சன அரசியலை விட்டு விட்டு சேவை அரசியலை முன்னெடுத்தார்.

அவர் எதிர்க்கட்சி தலைவராக இருந்து பாடசாலைகளுக்கு, வைத்தியசாலைகளுக்கு உதவ முடியுமாக இருந்தால் அவர் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டால் எவ்வாறான அபிவிருத்தியையும் சிஸ்டம் சேன்ஞ்சையும் கொண்டு வருவார் என்பதை நாங்கள் சிந்திக்க வேண்டும் என தெரிவித்தார்

# செண்ட்.ஜோன்ஸ் அம்பியூலென்ஸ் தொண்டர் படையணி பயிற்சி பாசறை

(அஸ்ஹர் இப்றாஹிம்)

கம்பளை ஸாஹிரா தேசிய கல்லூரியின் செண்ட். ஜோன்ஸ் அம்பியூலென்ஸ் மாணவர் தொண்டர் படையணியின் மூன்று நாள் வதிவிட பிராந்திய பயிற்சிப் பாசறை அண்மையில் கல்லூரி வளாகத்தில் இடம்பெற்றது. கல்லூரி மாணவர்களை இணைப் பாடவிதான செயற் பாடுகளில் ஈடுபடுத்து வதன் மூலம் மாணவர் களிடையே மறைந்து கிடக்கும் திறமைகளை வெளிக் கொணருவதுடன், மாணவர்கள் ஒரு விடயத்தினை மேற்கொள்ளும் போது அவர்கள் அவ்விடயத்தில் தன்னிச்சையாக முடிவெடுக்க கூடிய திறமையை வளர்த்து கொண்டர்களாக சமூகத்தில் பல பணிகளிலும் ஈடுபடுவதற் கான பயிற்சிகளை பாடசாலைக்காலத்திலே மாணவர்கள் பெற்றுக் கொள்வதற்காகவும் இப் பயிற்சி பாசறை ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

# துருக்கிய புதிய தூதுவர் கலாநிதி சிராஸ் மீராசாஹிப் சந்திப்பு



(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

இலங்கைக்கான துருக்கிய குடியரசின் தூதுவராக புதிதாகக் கடமையேற்ற செமி லூத்வு ரேக்ற் மற்றும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் சர்வதேச விவகாரங்களுக்கான பணிப்பாளரும் முன்னாள் கல்முனை மாநகர முதல்வரும் மெட்ரோ பொலிட்டன் கல்லூரியின் ஸ்தாபகத் தலைவருமான கலாநிதி சிராஸ் மீராசாஹிபுக்கு மிடையிலான சந்திப்பொன்று கொழும்பிலுள்ள துருக்கிய தூதுவர் அலுவலகத்தில் (22) இடம்பெற்றது.

இக்கலந்துரையாடலின் போது இலங்கை மக்களின் கல்வி, அரசியல் சமூக, கலாசாரம் போன்ற இன்னோரன்ன விடயங்கள் பலவும் பேசப்பட்டன.

இதன் போது கலாநிதி சிராஸ் மீராசாஹிபின் இணைப்புச் செயலாளர் ஏ.எல்.எம் இன்சாட்டும் கலந்து கொண்டார்.

எதிர்காலத்தில் கிழக்கிலங்கை மக்களுக்கு தன்னால் இயன்ற உதவி ஒத்தாசைகளை வழங்குவதாக துருக்கி தூதுவர் இதன்போது உறுதியளித்தமையும் குறிப்பிடத்தக்கது.

# ஜனாதிபதி தேர்தலை முன்னிட்டு துண்டுப் பிரசுரம்

(பாறுக் ஷிஹான்)

தேசிய மக்கள் சக்தி எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலை முன்னிட்டு துண்டுப் பிரசுரம் ஊடாக அம்பாறை மாவட்டங்களின் கரையோர பிரதேசங்களில் பிரசாரங்களில் ஈடுபட்டனர்.

நாடு அனுராவோடு அவரின் வெற்றியில் நாமும் பங்காளியாக இருப்போம் வாரீர், மாற்றத்தை நோக்கி பயணிப்போம், வளமான நாடு அழகான வாழ்க்கை என பிரச்சார துண்டுப் பிரசுரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள-துடன் அதனை வீடு வீடாக செயற்பாட்டாளர்கள் விநியோகித்து வருகின்றனர்.

அனுரா திசாநாயக்கவின் வெற்றியை இந்த ஜனாதிபதி தேர்தல் பிரச்சாரத்தின் ஊடாக உறுதிப்படுத்த இவ்வாறான செயற்பாட்டில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் வசந்த பியதிஸ்ஸ உட்பட கல்முனைத் தொகுதி அமைப்பாளர் ஆதம்பாவா மற்றும் தேசிய மக்கள் சக்தியின் செயற்பாட்டாளர்கள் ஒன்றிணைந்து மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கல்முனை தொகுதி தேர்தல் குழு தலைவராக ஹரீஸ் எம்.பி. நியமனம்.

(நூருல் ஹுதா உமர்)

ஐக்கிய மக்கள் கூட்டணியின் ஜனாதிபதி வேட்பாளரும், எதிர்க்கட்சி தலைவருமான சஜித் பிரேமதாசவின் அமோக வெற்றியை உறுதிப்படுத்தும் நோக்கில் அமைக்கப்பட்டுள்ள கல்முனை தேர்தல் தொகுதியின் தேர்தல் நடவடிக்கை செயற்குழு தலைவராக பாராளுமன்ற உறுப்பினரும், முன்னாள் இராஜாங்க அமைச்சருமான சட்டத்தரணி எச்.எம்.எம்.ஹரீஸ் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான சட்டத்தரணி ரவூப் ஹக்கீம் தலைமையில் மருதமுனை தனியார் விடுதியில் நேற்று இடம்பெற்ற ஐக்கிய மக்கள் கூட்டணியின் ஜனாதிபதி வேட்பாளரும், எதிர்க்கட்சி தலைவருமான சஜித் பிரேமதாசாவின் கல்முனை தொகுதியில் வெற்றியை உறுதிப்படுத்தும் வேலைத்-திட்டங்கள், பிரச்சார நடவடிக்கைகள் தொடர்பில் இதன்போது ஆராயப்பட்டது.

இந்த கலந்துரையாடலில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் உயர்பீட உறுப்பினர்கள், உள்ளூராட்சி சபை முன்னாள் உறுப்பினர்கள், ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதேச அமைப்பாளர்கள், வேட்பாளர்கள் என பலரும் கலந்து கொண்டனர்

# திருமலை மட்கோ அல்-மின்ஹாஜ் மகா வித்தியாலயத்தில் முப்பெரும் விழா

(ஸைபுல் ஹபீஸ்)

திருகோணமலை மட்கோ அல்-மின்ஹாஜ் மகா வித்தியாலயத்தின் 45 ஆவது கல்லூரி தினத்தை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்ட முப்பெரும் விழா எதிர்வரும் 2024.09.03 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இடம்பெறவுள்ளது.

இதன்போது பழைய மாணவர்கள் மற்றும் பாடசாலை ஆசிரியர், ஆசிரியைகள், மாணவர்களின் பங்கு பற்றுதலுடனான நடை பவனி, கௌரவிப்பு வைபவம், பரிசளிப்பு விழா என முப்பெரும் விழாக்கள் இடம்பெறவுள்ளதுடன், மாபெரும் கலை நிகழ்வும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

பாடசாலை அதிபர் திருமதி முஹமட் இர்ஷாட் றாஷிதா தலைமையில் இடம் பெறவுள்ள இக்கல்லூரி தின விழாவில் கிழக்கு மாகாண ஆளுநர் ஏ.செந்தில் தொண்டமான் பிரதம அதிதியாகவும், கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எச்.ஈ.எம்.டபிள்யூ.ஜி.திஸாநாயக்க கௌரவ அதிதியாகவும், திருகோணமலை கல்வி திணைக்களத்தின் மாகாண பணிப்பாளர் திருமதி எஸ். குலேந்திரக் குமார், திருகோணமலை வலயக் கல்வி பணிப்பாளர் ரி.ரவி, திருகோணமலை தலைமையக பொலிஸ் பரிசோதகர் சமன் கே.ஜெயரத்தன ஆகியோர்கள் விஷேட அதிதிகளாகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

# முச்சக்கர வண்டி - பஸ் மோதி விபத்து

(எம்.ஏ.முகமட்)

கிண்ணியாவிலிருந்து திருமலை நோக்கி பயணித்த முச்சக்கர வண்டியுடன் எதிரே வந்த பஸ் வண்டி மோதியதில் முச்சக்கர வண்டியில் பயணித்த ஐவரும் காயங்களோடு கிண்ணியா பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். இச்சம்பவம் (27) அதிகாலை 12.30 மணியளவில் மட்டக்களப்பு திருகோணமலை பிரதான வீதியின் வெள்ளை மணல் பகுதியில் இடம் பெற்றுள்ளது.

இதேவேளை விபத்துக்குள்ளான பஸ் சாரதி பஸ்ஸோடு தப்பிச் சென்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.



மாளிகைக்காடு சபீனா முஸ்லிம் வித்தியாலயத்தில் பாடசாலை அதிபர் எம்.ஜ.எம்.அஸ்மியின் வழிக்கட்டலில் பெற்றோரின் பங்களிப்புடன் ஆரம்ப பிரிவு ஆசிரியை றிஸ்வானாவின் நெறிப்படுத்தலில் மாணவர் களால் ஒழுங்கு செய்யப்பட்ட சிறுவர் சந்தை சிறப்பாக நடைபெற்றது.

(படம்: அஸ்ஹர் இப்றாஹிம்)

# மட்டு.செங்கலடி பிரதேசத்தில் விழிப்புணர்வு ஊர்வலம்

(நாஸர்)




நாட்டில் டெங்கு காய்ச்சலினால் பீடிக்கப்பட்டவர்களது எண்ணிக்கை அண்மைக்காலத்தில் 3500 ஐவிட அதிகரித்துள்ளதாக அரசாங்கத்தினால் அறிவிக்கப்பட்டதையடுத்து மட்டக்களப்பு - செங்கலடி பிரதேசத்தில் விழிப்புணர்வு ஊர்வலம் மற்றும் சிரமதானப் பணிகளும் நடைபெற்றன.

கிறிஸ்தவ குடும்ப சபை போதகர் எஸ். ஜேசுதாசன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பொதுச் சுகாதார பரிசோதகர் சிவசேகரம் சிவகாந்தன் உள்ளிட்ட சுகாதாரத்துறை அதிகாரிகள் பலர் பங்கேற்றனர். பாடசாலை மாணவச் சிறுவர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. அத்துடன் டெங்கு நுளம்புகள் உருவாகும் இடங்கள் அடையாளப்படுத்தப்பட்டதுடன் அவற்றை அழிக்கவேண்டியதன் அவசியம் தொடர்பாகவும் வலியுறுத்தப்பட்டது.

இதையடுத்து சிறுவர்கள் எல்லை வீதியூடாக ஊர்வலமாகச் சென்று பிரதேச சுகாதார வைத்தியதிகாரி காரியாலயத்தை அடைந்தனர். அங்கிருந்து மாணவர்கள் ஐந்து அணிகளாகப் பிரிந்து சென்று வைத்தியசாலை வீதி, பொதுச் சந்தை வீதி, பிரதேச செயலக வீதி, பிரதான வீதி மற்றும் எல்லை வீதி ஆகிய பாதையோரங்களைச் சுத்தம் செய்தனர்.

# சாரதிகளுக்கான விழிப்புணர்வு நிகழ்வு

(பாறுக் ஷிஹான்)



தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் தேசிய வேலைத்திட்டத்தின் கீழ் பாடசாலை மாணவர்களை ஏற்றி இறக்கும் சாரதிகள் மற்றும் அவர்களது உதவியாளர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்வு கல்முனை பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.

"பிள்ளைகளின் பாதுகாப்பு சாரதிகளின் கைகளிலே" எனும் தொனிப் பொருளில் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் மாவட்ட சமூக உளநல அதிகாரி யூ.எல்.அசார்டீன் ஏற்பாட்டில் நடாத்தப்பட்டது.

இதன் போது கல்முனை, சாய்ந்தமருது மற்றும் கல்முனை தமிழ் பிரிவிலுள்ள பாடசாலை சேவையில் ஈடுபடும் 40 மேற்பட்ட வாகன சாரதிகள் கலந்து கொண்டனர்.

கல்முனை பிரதேச செயலாளர் ஜெ.லியாகத் அலியின் வழிகாட்டலில் நிர்வாக உத்தியோகத்தர் ஏ.சி.எம்.பளீல் நெறிப்படுத்தலில் கல்முனை தலைமையக பொலிஸ் போக்குவரத்து பிரிவின் பொறுப்பதிகாரிகள் மற்றும் கல்முனை பிரதேச செயலக சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.

இதன்போது பாடசாலை மாணவர்களை ஏற்றி இறக்கும் சாரதிகளுக்கான 1929 ஸ்டிகர்களும் பகிர்ந்தளிக்கப்பட்டன. இது தவிர பாடசாலை மாணவர்களை ஏற்றி இறக்கும் சாரதிகள் குறைநிரைகள் ஆராயப்பட்டதுடன் கருத்துக்கள் ஆலோசனைகள் என்பனவும் பெறப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

# மக்கள் பணிமனை திறப்பு




அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் சாய்ந்தமருதுக்கான மக்கள் பணிமனை திறப்பு விழா கட்சியின் மாவட்ட செயற்குழு உறுப்பினரும் முன்னாள் பொதுச் சேவை ஆணைக்குழு உறுப்பினருமான ஏ.எல்.எம்.சலீம் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கட்சியின் தேசிய தலைவரும் முன்னாள் அமைச்சரும், பாராளுமன்ற உறுப்பினருமான றிஷாட் பதியுதீன் மக்கள் பணிமனையை திறந்து வைத்தார்.

இந்நிகழ்வில் கட்சியின் தவிசாளரும், முன்னாள் இராஜாங்க அமைச்சருமான எம் எஸ் அமீர் அலி, கட்சியின் அம்பாறை மாவட்ட செயற்குழு தலைவரும் முன்னாள் மாகாண சபை உறுப்பினருமான கே.அப்துல் றஸாக், முன்னாள் பிரதேச சபை தவிசாளர்களான எம்.ஏ.எம்.அஸ்ரப் தாஹிர், எம்.ஏ. அன்சில், எம்.ஐ.எம். மாஹிர், கட்சியின் அம்பாறை மாவட்ட இளைஞர் அமைப்பாளர் றிஷ்லி முஸ்தபா, உயர்பீட உறுப்பினர் எம்.எஸ்.முபீன், கட்சியின் உயர் பீட உறுப்பினர்கள், மாவட்ட செயற்குழு உறுப்பினர்கள், கட்சியின் போராளிகள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.



மூத்த எழுத்தாளர் கலாபூஷணம் எஸ்.ஐ.நாகூர் கனி எழுதிய "மாநபி பேசாத மௌன மொழி" நூல் வெளியீட்டு விழா ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் தலைவர் என்.எம். அமீன் தலைமையில் ஜே.ஆர்.ஜெயவர்தனபுர நிலைய கேட்போர் கூடத்தில் சிறப்பாக நடைபெற்றது. இந் நிகழ்வின் போது சத்திய எழுத்தாளர் எஸ்.ஐ. நாகூர் கனி பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்படுவதை படத்தில் காணலாம்.

(படம் : எம்.எஸ்.எம்.ஸாகிர்)

# பெரிய கல்லாறு ஆலய 130வது திருவிழா

(டினேஸ்)

மட்டக்களப்பு மறைமாவட்டத்தில் அமையப் பெற்றுள்ள பெரிய கல்லாறு ஆலயத்தின் 130வது திருவிழா திருப்பலியானது கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை 7:30 மணிக்கு பங்குத்தந்தை அருட்பணி அன்ரன் டெறன்ஸ் றாகல் அடிகளாரின் ஒழுங்கமைப்பில் நடைபெற்றது.

கடந்த 9 நாட்கள் மாலை வழிபாடுகள் இறைமக்களை தயார்படுத்தும் வண்ணம் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு கருப்பொருளை மையப்படுத்தியதாக இறைமக்களுக்கு சிந்தனைகள் வழங்கப்பட்டது.

அதனை தொடர்ந்து சனிக்கிழமை மாலை வேஸ்பர் நற்கருணை ஆராதனை வழிபாடு அருட்தந்தை சீ.வி.அன்னதாஸ் அடிகளாரின் தலைமையில் இடம் பெற்றது.

திருவிழா திருப்பலியினை அருட்தந்தை சீ.வி.அன்னதாஸ் அடிகளார் தலைமை தாங்கி பங்குத்தந்தை அன்ரன் டெறன்ஸ் றாகல் அடிகளாரும், உதவி பங்கு தந்தை கர்ஷதன் றிச்சட்சன் அடிகளாரும், இணைந்து கூட்டு திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டது.

# பெண் சுய தொழில் முயற்சியாண்மை திட்டம்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

ஏ.ஆர்.மன்சூர் பௌண்டேசனினால் "பொருளாதார ரீதியாக வலுப்படுத்தப்பட்ட பெண் சமூகத்தை உருவாக்குவோம்" எனும் தொனிப்பொருளில் கல்முனை, சாய்ந்தமருது, நாவிதன்வெளி,காரைதீவு மற்றும் நிந்தவூர் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பிரதேசங்களில் பெண் மேம்பாட்டு திட்டம் ஒன்றை ஏ.ஆர்.மன்சூர் பௌண்டேஷனின் தலைவி சட்டத்தரணி மர்யம் மன்சூர் நளிமுதீன் தலைமையில் முன்னெடுக்கப் படவுள்ளது.

அதன் ஒரு அங்கமான பெண் சுயதொழில் முயற்சியாண்மை எனும் பெரும் பெண்கள் நலன் உதவித்திட்டத்தின் கல்முனைக்கான நிகழ்வானது கல்முனை இக்பால் சன சமூக நிலையத்தில் நடைபெற்றது.

பெண்களின் வளர்ச்சிக்கு தேவையான வசதிகளை செய்து கொடுத்து பெண்களுக்கான தொழில் வாய்ப்புகளை ஏற்படுத்தி, அதற்கான வளங்களை அமைத்துக் கொடுத்து, பெண்களின் நலன்புரி, சுகாதாரம், தொழில் நுட்பம் மற்றும் பாதுகாப்பு போன்ற விடயங்களில் கவனம் செலுத்தி அனைத்து வசதிகளையும் செய்து கொடுப்பதே இத்திட்டத்தின் பிரதான நோக்கமாகும்.

## கல்முனை மாநகர ஆணையாளர் என்.எம்.நௌபீஸ் ஜப்பான் பயணம்

(அஸ்லம் எஸ்.மௌலானா)



கிழக்கு மாகாண சபையின் முகாமைத்துவ அபிவிருத்தி பயிற்சிப் பிரிவு பணிப்பாளரும் கல்முனை மாநகர ஆணையாளருமான என்.எம். நௌபீஸ் விசேட புலமைப்பரிசில் பெற்று ஜப்பான் பயணமானார்.

ஜப்பானில் ஒரு மாத காலம் இடம்பெறவுள்ள உள்ளூர் தொழில்துறை மேம்பாடு குறித்த அறிவுப் பகிர்வு பயிற்சித் திட்டத்தில் பங்குபற்றுவதற்காகவே சென்றுள்ளார்.

ஜப்பானிய அரசாங்கத்தினால் நடாத்தப்படுகின்ற இப்பயிற்சித் திட்டத்தில் பங்குபற்றுவதற்கான புலமைப்பரிசில் அனுசரணையை ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனம் வழங்கியுள்ளது.

இப்பயிற்சியில் பங்குபற்றுவதற்காக ஜப்பான் நாட்டு அதிகாரிகளுக்கு மேலதிகமாக 06 நாடுகளில் இருந்து தலா ஒருவர் வீதம் 06 அதிகாரிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இதன் பிரகாரம் இலங்கை அரசாங்கத்தை பிரதிநிதித்துவப்படுத்தி மாநகர ஆணையாளர் என்.எம். நௌபீஸ் மாத்திரம் தெரிவு செய்யப்பட்டிருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

## மரக்குற்றி விழுந்ததில் ஆண் ஒருவர் உயிரிழப்பு

(தில்சாத் பர்வீஸ்)

சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கைர் ஜும்மா பள்ளி வாசலுக்கு அருகாமையில் அமைந்துள்ளது மர ஆலையத்தில் கடந்த வியாழக்கிழமை (29) கனரக வாகனத்தில் இருந்து மரக்குற்றியை இறக்கும் போது ஆண் ஒருவர் மீது குறித்த மரக்குற்றி விழுந்ததில் சம்பவ இடத்திலேயே ஆண் ஒருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.இச் சம்பவத்தில் மொனராகலை பிரதேசத்தை சேர்ந்த 29 வயதுடைய ரசி குமார் என்பவரே உயிரிழந்துள்ளதாக சம்மாந்துறை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை சம்மாந்துறை பொலிசார் மேற்கொண்டு வருகின்றனர்.

# ஜனாதிபதி தேர்தல் - 2024

## அனுர குமார திசாநாயக்க மோசமான இனவெறி கொண்டவர்

(பாறுக் ஷிஹான்)

அனுர குமார திசாநாயக்கவினை பற்றி கூற தேவையில்லை. மோசமான இனவெறி கொண்ட ஒருவர். இறுதிப் போரில் ஒன்று அரை இலட்சம் தமிழர்களை அழித்து ஒழிப்பதற்காக பல்லாயிரக்கணக்கான இளைஞர்களை திரட்டி இராணுவத்திற்கு கொடுத்திருந்த ஒரு கொலைவெறி பிடித்த குழு ஒன்றின் தலைமைச்சக்தியாக அவர் இருக்கின்றார்.அது மாத்திரமன்றி வடக்கு கிழக்கினை வழக்கு தாக்கல் செய்து பிரித்த இனவெறியர்கள் இவர்கள் என தமிழ் தேசிய மக்கள் முன்னணி கட்சியின் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான செல்வராஜா கஜேந்திரன் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் அம்பாறை திருக்கோவில் பொலிஸ் பிரிவிற்குட்ட பகுதிகளில் உள்ள வர்த்தக நிலையங்களுக்கு தெளிவூட்டும் துண்டு பிரசுரம் வழங்கும் செயற்பாட்டில் ஈடுபட்டவேளை ஊடகங்களிற்கு கருத்து தெரிவிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மேலும் தனது கருத்தில் குறிப்பிட்டதாவது

75 வருடங்களாக தமிழருக்கு உரிமை வழங்க மாட்டோம் என்று பேரினவாதிகள் கூறி வருகின்றார்கள். குறிப்பாக பேரினவாதிகள் சிங்கள மக்களுக்கு இவ்வாறாக கருத்துக்களை கூறி வருகின்றார்கள்.அவர்களது தேர்தல் விஞ்ஞாபனத்தில் இது ஒரு பௌத்த நாடு.சிங்கள நாடு.இதை பேணிப் பாதுகாப்போம் என்று குறிப்பிட்டுள்ளார்கள்.அது மட்டுமன்றி வடகிழக்கில் 1000 பௌத்த விகாரை அமைப்பதாகவே கூறி வருகின்றனர். சஜித் பிரேமதாசவின் தேர்தல் விஞ்ஞாபனமும் அவ்வாறு தான் இருந்திருக்கின்றது. சஜித் பிரேமதாச புத்தசாசன அமைச்சராக இருந்த போது நீராவியடி பிள்ளையார் ஆலய முற்றத்தில் ஒரு பௌத்த பிக்குவின் சடலம் எரிக்கப்பட்டது. இவ்விடயம் அமைச்சரின் ஆலோசனை வழிகாட்டலுடன் தான் நடைபெற்றது.இது தவிர அவரது காலத்தில் தான் யாழ்ப்பாணம் நாவற்குழி பகுதியில் சட்டவிரோத விகாரை கூட கட்டப்பட்டிருந்தது.

அனுர குமார திசாநாயக்க வினை பற்றி கூற தேவையில்லை. மோசமான இனவெறி கொண்ட ஒருவர். இறுதிப் போரில் ஒன்றரை இலட்சம் தமிழர்களை அழித்து ஒழிப்பதற்காக பல்லாயிரக்கணக்கான இளைஞர்களை திரட்டி இராணுவத்திற்கு கொடுத்திருந்த ஒரு கொலைவெறி பிடித்த குழு ஒன்றின் தலைமைச் சக்தியாக அவர் இருக்கின்றார். அது மாத்திரமன்றி வடக்கு கிழக்கினை வழக்கு தாக்கல் செய்து பிரித்த இனவெறியர்கள் இவர்கள்.இவர்கள் எல்லோரது நிலைப்பாடுகளும் இவைகள் தான்.இதில் நாமல் ராஜபக்ஸ விதிவிலக்கானவரல்லர். இதனால் தான் இவர்களிடம் தமிழருக்கு உரிமை கொடுக்க போகின்றோம் என கூறினால் தேர்தல் விஞ்ஞாபனத்தில் எழுதி உங்களின் சிங்கள மக்களிற்கு சொல்லுங்கள். இந்த தோல்வியடைந்த ஒற்றையாட்சியினை ஒழிக்க போகின்றோம். சமஸ்டியை கொண்டு வரப்



போகின்றோம் என்பதை தேர்தல் விஞ்ஞாபனத்தின் ஊடாக வெளிப்படுத்தி வாருங்கள் என நாங்கள் கூறுவது நம்பிக்கைக்காக தான்.

இது தவிர இன்று நேற்று முளைத்த காளானாக இருக்கின்ற இந்த நாமல் ராஜபக்ஸவிற்கு சமீப காலமாக பல கருத்துக்களை குறிப்பிடும் துணிச்சலை கொடுத்தது சுமந்திரன், சம்பந்தன், அரியநேந்திரன், சிறிதரன், உட்பட இந்த தமிழரசு கட்சியின் வீட்டு சின்னத்தில் போட்டியிட்டு 2010 ஆண்டு 2015 , 2020 ஆண்டு வெற்றி பெற்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள் முழுப் பேரும் பொறுப்பேற்க வேண்டும்.விக்னேஸ்வரனும் முழுப்பொறுப்பினையும் ஏற்க வேண்டும்.ஏனெனில் ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவைக்கு குற்றவியல் விசாரணைகளை நடாத்துவதற்கான அதிகாரங்கள் இல்லை என்பது நன்றாக தெரிந்த பிற்பாடும் தொடர்ச்சியாக உள்ளக விசாரணைக்குள் பொறுப்பு கூறலை முடக்கி சர்வதேச விசாரணை வேண்டாம். இனப்படு கொலையாளிகளை பாதுகாப்பதற்காக மேற்கூறியவர்கள் ஒவ்வொருவரும் கூட்டாக செயற்பட்டு வந்தவர்கள். குறிப்பாக இந்த இனப்படு கொலையாளி கோட்டபாய ராஜபக்ஸ 2019 ஆண்டு பதவியேற்ற பிற்பாடு ஜனாதிபதியாக இருக்கின்ற போது 2021 ஆண்டு மார்ச் மாதம் இலங்கை தொடர்பாக ஒரு தீர்மானம் வந்த நிலையில் அந்த சந்தர்ப்பத்தில் வந்து பொறுப்புக்கூறல் செயல்பாட்டை மனித உரிமை பேரவையில் இருந்து வெளியே எடுத்து சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு எடுத்து செல்ல வேண்டும் என முயற்சியை எங்கள் தலைவர் கஜேந்திர குமார் பொன்னம்பலம் உட்பட எங்களது கட்சி முக்கியஸ்தர்கள் முன்னெடுக்கின்ற போது இவர்கள்(தமிழரசுக்கட்சியினர்) கடிதம் எழுதி ஜெனிவா மனித உரிமை பேரவையில் கொண்டு வரப்படவுள்ள விடயம் எந்த வடிவத்தில் ஏனும் நிறைவேற்றப்பட வேண்டும் .

ஏனெனில் இலங்கை தொடர்பில் ஜெனிவாவில் தீர்மானம் ஒன்று தேவை என்பதாகும். இவ்வாறாக இவர்கள் கொடுத்த ஆதரவு தான் நாமல் ராஜபக்ஸ போன்றவர்களுக்கு இவ்வாறான திமிரினை கொடுத்திருக்கின்றது. அது மட்டுமன்றி நாமல் ராஜபக்ஸ சீன சார்பானவர் என்பதனால் ஊடகங்கள் அவரது கருத்துக்களை பெரிதுபடுத்துகின்றன. அது மட்டுமன்றி 2010 ஆண்டு தமிழரசு கட்சியினர் சரத் பொன்சேகாவிற்கு வாக்களிக்க சொன்னதை மறக்க முடியுமா. ஆகவே எமது மக்கள் இவ்வாறானவர்களை தெளிவாக புரிந்து கொள்ள வேண்டும்.

1920 ஆண்டு முஸ்லீம்களிற்கு எதிரான படுகொலையில் ஈடுபட்டமைக்காக பிரித்தானியாவில் வழக்கு போடப்பட்டிருந்தது. அந்த வழக்கில் இலங்கையில் இருந்து சென்ற தமிழ் தலைவர்கள் வாதாடி அந்த சிங்கள தலைவர்களை மீட்டு கொண்டு வந்த போது அந்த நன்றி கடனுக்காக கொழும்பிற்கு வந்திறங்கிய இந்த தமிழ் தலைவர்களை குதிரை வண்டிலில் ஏற்றி குதிரைகளை கழற்றி விட்டு பண்டார நாயக்க உள்ளிட்ட சிங்கள தலைவர்கள் குதிரைகள் போன்று தோளில் வைத்து வண்டிகளை இழுத்து சென்றார்கள். அந்தளவிற்கு தமிழர்களுக்கு சிங்கள தலைவர்கள் கடமைப்பட்டு இருந்தார்கள். பயந்து கொண்டிருந்தார்கள்.

ஆனால் இன்று ஒன்றரை இலட்சம் தமிழ் மக்களை கொன்று குவித்தவர்களை தமிழ் தலைவர்கள் என்று சொல்கின்ற அடிமைகள் ஜெனிவா வரை சென்று சர்வதேச விசாரணை யின்றி மீட்டு இருக்கின்ற நிலையில் இன்று எம்மை சிங்கள மக்கள் துரத்தி துரத்தி அடிக்கின்றார்கள். எனவே எமது மக்கள் சிந்திக்க வேண்டும். எமது வாக்குகளை பெற இன்று பொது வேட்பாளர்களை நிறுத்தி இருக்கின்றார்களா? இவ்வாறானவர்கள் தான் அரசுடன் பேரம் பேசுவார்களா? என்பதை எமது மக்கள் நன்றாக சிந்திக்க வேண்டும் என செல்வராஜா கஜேந்திரன் குறிப்பிட்டார்.

## மக்கள் செல்வாக்கை பெற்ற தலைவரே சஜித் பிரேமதாச

### ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேசிய அமைப்பாளர் எம்.எஸ் தௌபீக்

எமது நாடு பொருளாதார ரீதியில் வீழ்ச்சியடைந்து எழுந்து கொள்ள முடியாத ஒரு காலகட்டத்தில் மிக முக்கியமான ஜனாதிபதி தேர்தல் ஒன்றை எதிர்நோக்கியிருக்கிறோம். அரசியல் வரலாற்றில் அதிகளவான வேட்பாளர் போட்டியிடும் ஓர் தேர்தலாக இது காணப்படுவதுடன் வழமைக்கு மாறாக பலத்த போட்டியும் ஏற்பட்டிருப்பதனை அவதானிக்க முடிகிறது. இத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களில் ஊழல் , மோசடி அற்ற மக்கள் செல்வாக்கை பெற்ற ஓர் தலைவராக சஜித் பிரேமதாச மாத்திரமே காணப்படுகிறார் என திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ் தௌபீக் தெரிவித்தார். ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் அவர் கருத்து தெரிவிக்கையில்,

இத்தேர்தல் இனம், மதம் மற்றும் மொழி வேறுபாடுகளை பார்த்து வாக்களிக்கக்கூடிய தேர்தலல்ல. முழுமையாக அனைவரும் நாட்டு நலனை மையப்படுத்திய சிந்திக்க வேண்டும் அப்போதுதான் நாம் எம் இலக்குகளை அடையலாம். மூவின மக்களும் சந்தோசமாக நிம்மதியாக வாழக்கூடிய நாட்டை உருவாக்குவதே இப்போதைய எமது தேவை இதனை நாட்டு மக்களும் அறிந்துள்ளார்கள். அதனை ஏற்படுத்துவதற்கான ஓர் தலைமையை உருவாக்குவதற்கான தேர்தலாகவே இத்தேர்தலை நாம் பார்க்கவேண்டியிருக்கிறது. அந்த தலைமைக்கு தகுதியானவர் எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச என்பதை இப்போது முழு நாடும் அறிந்துள்ளது என்றார்.

தற்போது நாட்டில் எரிபொருள் வரிசை, எரிவாயு வரிசை இல்லாமல் போனாலும் நாடு இன்னும் பொருளாதார ரீதியில் முன்னேற்றம் அடையவில்லை. எரிபொருள்,எரிவாயு மின்சாரம், நீர்கட்டணம் மற்றும் உணவுப் பொருட்கள் விலைக்கு பழைய நிலைக்கு முழுமையாக வரவில்லை. அனைத்து கட்சிகளும் இணைந்தே சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்புடன் நாட்டில் வரிசை யுகத்தை இல்லாமல் செய்தோம். இதற்கு தனிப்பட்ட எவரும் உரிமை கொள்ள முடியாது என்பதை எமது மக்கள் நன்கு அறிவார்கள்.

நமக்கு இப்போது தேவை சர்வேசத்தில் நன்மதிப்பை பெற்ற, ஊழல் இல்லாத ஓர் ஜனாதிபதியே அதற்கு தகுதியானவர் சஜித் பிரமதாச மாத்திரம் தான் சர்வதேச நாடுகளும் அவரது அரசாங்கத்திற்கு உதவுவதற்கு தயாராக இருப்பதாகவும் அரசியலுக்கு பொய் சொல்லி மக்களை ஏமாற்ற வேண்டிய எந்த தேவையும் எனக்கில்லை எனவும் தெரிவித்தார்.

உங்கள் பிரதேசத்தில் இடம் பெறுகின்ற அரசியல் தொடர்பான கருத்துக்கள் மற்றும் நிகழ்வுகளின் தொகுப்புக்களை எமக்கு அனுப்பி வையுங்கள்

**அரசியல் கள கருத்துக்கள்...**

# ஜனாதிபதி தேர்தல் - 2024



## ரணில் விக்ரமசிங்கவுக்கு நன்றி செலுத்தவே கட்சிக் கட்டுப்பாட்டையும் மீறி ஆதரிக்கிறேன்

### பாராளுமன்ற உறுப்பினர் அலி ஸாஹிர் மௌலானா

(மட்டு - துஷாரா)

பாராளுமன்ற பெரும்பான்மை உறுப்பினர்களால் தெரிவு செய்யப்பட்ட ரணில் விக்கிரமசிங்க, வீழ்ந்திருந்த பொருளாதாரத்தை மிக குறுகிய காலத்தில் கட்டியெழுப்பியவரை இந்த நாட்டின் ஜனாதிபதியாக மீண்டும் தொடர மக்கள் ஆணையை பெறுவதற்காகவே ரணில் விக்ரமசிங்க அவர்களை ஆதரிக்கத் துணிந்தேன் என்று மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அலி ஸாஹிர் மௌலானா தெரிவித்தார்.

எனது கட்சிக் கட்டுப்பாட்டையும் மீறி தனது ஆதரவை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஏன் வழங்கினேன் என்ற நிலைப்பாடு பற்றி மக்களுக்கு தெளிவு படுத்தும் உரையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், எமது நாட்டின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக வரக்கூடிய தகுதியும் தராதரமும் ஜனாதிபதி வேட்பாளர்களுள் ரணில் விக்கிரமசிங்கவுக்கு மட்டுமே உள்ளது.

இந்த ஜனாதிபதித் தேர்தல் நாட்டின் தலைவிதியை நிர்ணயிக்கப் போகின்ற ஒன்றாகும். இந்த தேர்தலில் கட்சிக் கொள்கைகளெல்லாம் ஒருபக்கம் வைத்து விட்டு சின்னா பின்னமாக மாறி சீரழிந்த எமது நாட்டை மீட்டு இன மத மொழி பேதமின்றி நாட்டு மக்கள் அனைவருமே சுதந்திர-மாக தமது மார்க்க கடமைகளை நிறைவேற்றக் கூடிய நிலமை-க்கு கொண்டு வந்த பெருமை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவர்களையே சாரும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

ஈஸ்டர் தாக்குதல் மற்றும் கொவிட் 19 தொற்று காரணமாக உம்ரா மற்றும் ஹஜ் கடமைகளை நிறைவேற்றுவதில் முஸ்லிம் மக்கள் பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்தனர். ஆனால் அந்த நிலமை இன்று மாறியிருக்கிறது.



அப்படியான சுமூகமான நிலையை ஏற்படுத்திய ரணில் விக்ரமசிங்கவுக்கு நன்றி செலுத்த மக்களுக்கு கிடைத்துள்ள அரிய சந்தர்ப்பமான ஜனாதிபதி தேர்தலை பயன்படுத்திக் கொள்ள வேண்டும் எனவும் தெரிவித்தார்.

## நாட்டில் வறுமை இல்லாமல் செய்யப்பட்டு உள்ளூர் உற்பத்தி அதிகரிக்கப்படும்

(நாஸர்)

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள 14 பிரதேச செயலகப் பிரிவுகளிலும் 14 கைத்தொழில் பேட்டைகளை அமைப்பதன் மூலமாக இளைஞர் யுவதிகளுக்கு தொழில் வாய்ப்பை ஏற்படுத்தும் பாரிய வேலைத்திட்டம் எமது அரசாங்கத்தில் முன்னெடுக்கப் படுமென ஐக்கிய மக்கள் கூட்டணியின் ஜனாதிபதி தேர்தல் வேட்பாளர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

பொதுவாக நாட்டில் பத்து இலட்சம் வீடுகளை அமைக்கும் திட்டம் அமுல்படுத்தப்படும். அத்துடன் சமுர்த்தி, அஸ்வெசும மற்றும் ஜனசவிய போன்ற திட்டங்களை ஒன்றிணைத்து செயற்படுத்தப்படவுள்ள வறுமை ஒழிப்பிற்கான புதிய திட்டத்தின் ஊடாக வறுமை நிலையிலுள்ள அனைத்து குடும்பங்களுக்கும் 24 மாதங்களுக்கு தலா இருபதாயிரம் ரூபா வழங்கப்படவுள்ளது.

அந்த திட்டத்தின் பயனாக உள்ளூர் உற்பத்தி அதிகரிக்கப்பட்டு வாழ்வாதாரம் உயர்த்தப்படும் என்றும் அவர் கூறினார்.

ஏற்றுமதி ஊக்குவிக்கப்பட்டு இரண்டு வருடகாலத்தில் வறுமையிலிருந்து மக்கள் மீட்சிபெறுவார்கள் என்றும் சஜித் பிரேமதாச குறிப்பிட்டார்.

மட்டக்களப்பு- ஏறாவூரில் நடைபெற்ற தேர்தல் பிரசார பொதுக்கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இக்கருத்துக்களைத் தெரிவித்தார்.

சஜித் பிரேமதாச இங்கு மேலும் பேசுகையில் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள அனைத்து பாடசாலைகளும் ஸ்மாட் பாடசாலைகளாகவும் அனைத்து வைத்தியசாலைகளும் ஸ்மாட் வைத்தியசாலைகளாகவும் மாற்றி அனைத்து வசதிகளும் ஏற்படுத்தப்படும். கல்வி மற்றும் சுகாதாரத் துறைக்க எமது அரசாங்கத்தில் முன்னுரிமை வழங்கப்படவுள்ளது. அந்த வகையில் ஏறாவூர் அலிகார் தேசிய பாடசாலை முழுமையான வசதி வாய்ப்புக் கொண்டதாக அபிவிருத்தி செய்யப்படும்.

இப்பிரதேசத்தில் சர்வதேச விளையாட்டு வீரர்கள் இருக்கின்றதை கருத்திற் கொண்டு நாநூறு மீற்றர் மைதானம் அமைக்கப்படும். ஏழைகளுக்காக வீடமைப்பு வசதிகளையும் செய்யவுள்ளேன். இதற்காக அரசாங்க காணிகள் பயன்படுத்தப்படும் என்றார்.

## கொரோனா ஜனாஸாக்களை எரித்ததை ஆராய பாராளுமன்ற தெரிவுக்குழுவை அமைக்க ஜனாதிபதி முன்வந்திருப்பது பாராட்டுக்குரியது

### கொழும்பு மாநகர சபை முன்னாள் உறுப்பினர் ஐ.ஏ. கலீலூர் ரஹ்மான்

(நூருல் ஹூதா உமர்)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அகில இலங்கை ஜம்மியதுல் உலமா சபையை இன்று (28) சந்தித்து போது கொரோனா தொற்று உள்ளதாக கூறி தகனம் செய்யப்பட்ட ஜனாஸாக்களுக்கு நீதியை நிலைநாட்டி அவர்களின் குடும்பத்தினருக்கு நியாயத்தைப் பெற்றுக் கொடுக்கும் விதமாக அனைத்து தரப்பினரையும் கொண்ட பாராளுமன்ற தெரிவுக்குழுவை நியமிப்பதாக தெரிவித்த கருத்தை வரவேற்பதுடன் இந்த தீர்மானத்தை அறிவித்துள்ள அவருக்கு எனது நன்றிகளையும் தெரிவித்து கொள்கிறேன் என ஜனாதிபதி செயலணி முன்னாள் உறுப்பினரும், கொழும்பு மாநகர சபை முன்னாள் உறுப்பினருமான ஐ.ஏ. கலீலுர் ரஹ்மான் ஊடக அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அவரது ஊடக அறிக்கையில் மேலும், கடந்த கொரோனா வைரஸ் பரவலின் போது மரணித்த முஸ்லிம்கள் மற்றும் ஏனைய மதத்தினரின் உடல்களை தகனம் செய்வதற்கு அரசாங்கத்திற்கு பரிந்துரைத்த தரப்பினரின் பொறுப்புக்கூறல் தொடர்பில் ஆராய்வதற்காக ஏனைய கட்சித் தலைவர்களுடன் கலந்தாலோசித்து பாராளுமன்ற தெரிவுக்குழு வொன்றை நியமிப்பதாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க முஸ்லிங்களின் உயரிய மரியாதைக்குரிய உலமா சபையினரிடம் தெரிவிதுள்ள இந்த உறுதிமொழியானது வரவேற்கத்தக்கது.

மேலும், கொரோனா தொற்றுள்ளதாக கூறி தகனம் செய்யப்பட்ட ஜனாஸாக் களுக்கு நீதியை நிலைநாட்டுவது தொடர்பில் ஆணைக்குழு மற்றும் பாராளுமன்ற தெரிவுக் குழுவொன்றை அமைக்க கோரி ஜனாதிபதி மற்றும் முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர் களுக்கு நான் அனுப்பிய கடிதத்தின் பதிலை இலங்கை முஸ்லிம்களின் உயர் சபையான அகில இலங்கை ஜம்மியதுல் உலமா சபையின் முன்னிலையில் உறுதியளிததுள் ளமையானது தகனம் செய்யப்பட்ட ஜனாஸாக்களின் குடும்பங்களு-க்கு ஜனாதி-பதியினால் வழங்கப்பட்ட மரியாதையாக கருதுகின் றேன். என்று தெரிவித்துள்ளார்.



அரசியல் கள கருத்துக்கள்...

## ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் செயற்பாட்டாளர்கள் அதிகளவானோரின் ஆதரவு ஜனாதிபதிக்குள்ளது

(மட்டு - துஷாரா)

கிழக்கு மாகாண மக்களின் பிரச்சினைகளுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் மட்டுமே தீர்வு வழங்க முடியும். அதனால் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் செயற்பாட்டாளர்கள் அதிகளவானோரின் ஆதரவு ஜனாதிபதிக்குள்ளது என்று ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேசிய கொள்கை பரப்புச் செயலாளரும் கிழக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினருமாகிய யூ.எல்.எம்.என். முபீன் தெரிவித்தார்.

முபீன் தலைமையிலான முஸ்லிம் காங்கிரஸ் செயற்பாட்டாளர்கள் மற்றும் தேசிய செயற்குழு உறுப்பினர்கள், பிரதேச மட்ட முஸ்லிம் காங்கிரஸ் அமைப்பாளர்கள் கொண்ட குழுவினர் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை ஆதரிப்பதற்கு தீர்மானித்து (21) கொழும்பில் தமது ஆதரவை ஜனாதிபதிக்கு தெரிவித்து வடக்கு கிழக்கு முஸ்லிம்கள் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகளை ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டு வந்து அப்பிரச்சினைகளுக்கான தீர்வை பெற்றுத்தருமாறு கோரி எழுத்து மூலமாக மகஜரையும் அக்குழுவினர் கையளித்தனர்.

இரண்டு வருடங்களுக்கு முன்னதாக நாட்டு மக்கள் பல்வேறு கஷ்டங்களை அனுபவித்தனர். அன்றிருந்த நிலையைவிடவும் இன்றைய நிலைமை நல்லதாகவே உள்ளது. எமது நாட்டின் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் நாட்டை முன்னேற்றுவதற்கான திட்டம் இருக்கின்றது. அவர் அப்பணியை தொடர்ச்சியாக முன்னெடுக்க வேண்டும். அவரின் இந்தப் பயணம் தடைப்பட்டால் நாடு மீண்டும் சரிவடையும் சாத்தியமுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

# இளைஞர்களின் எதிர்பார்ப்பை நிறைவேற்றுவேன்

## இளைஞர் அமைப்பாளர் றிஸ்லி முஸ்தபா

எம்.என்.எம்.அப்ராஸ், அஷ்ர.்.ப்கான்

இன மத பேதங்களுக்கு அப்பால் நான் எனது தந்தை பாட்டனார் போல பொதுமக்களுக்கு சேவை செய்ய விரும்புகிறேன் என அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் அம்பாறை மாவட்ட இளைஞர் அமைப்பாளரும் மயோன் கல்வித் திட்ட, சமூக அமைப்பின் தலைவருமான றிஸ்லி முஸ்தபா தெரிவித்தார்.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் அம்பாறை மாவட்ட இளைஞர்களின் மாபெரும் எழுச்சி மாநாடு “புதிய யுகம் நோக்கிய பயணம்” எனும் தொனிப்பொருளில் சாய்ந்தமருது பௌசி மைதானத்தில் கடந்த சனிக்கிழமை (24) இடம் பெற்றது. இதில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில்,

எனது தந்தை மர்ஹூம் மயோன் முஸ்தபாவின் திட்டங்களில் ஒன்றான அம்பாரை மாவட்டத்தின் அபிவிருத்தி மற்றும் மாவட்ட இளையோருக்கான வேலைவாய்ப்பு, அம்பாறை மாவட்ட இளைஞர்களுக்கான நவீன வசதிகள் கொண்ட தொழிநுட்ப கல்லூரி, நவீன வசதிகள் கொண்ட விளையாட்டு மைதானம் மேலும் பல இளையோருக்கான தேவைப்பாடுகள் மக்கள் நலன்சார் இதர சேவைகள் என்பன எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் சஜித் பிரேமதாஸ நிச்சயம் வெற்றி பெற்ற பின்னர் அதன் பிறகு அமையவுள்ள அரசாங்கத்தில் முழு அதிகாரம் கொண்ட அமைச்சராக நிச்சயம் எமது அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவர் றிஷாட் பதியுதீன் நியமிக்கப்படுவார் அதன் மூலம் தலைவரின் உதவியுடன் மேலும் பல சேவைகளை மேற்கொள்வேன்.

அம்பாறை மாவட்டத்தில் என்னை பல கட்சிகள் அழைத்தன. ஆனால், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் அம்பாரை கட்டமைப்பு மாவட்ட கொள்கை சரியான பாதையை முன்னெடுக்கும் என்ற வகையில் நான் இந்த கட்சியில் இணைந்து பயணித்து சேவையாற்றவுள்ளேன்.

இந்த இளைஞர் மாநாட்டில், அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தேசிய தலைவரும் முன்னாள் கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சருமான பாராளுமன்ற உறுப்பினர் றிஷாட் பதியுதீன் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

மேலும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தவிசாளரும் முன்னாள் அமைச்சருமான அமீர் அலி கௌரவ அதிதியாகவும், தேசிய கொள்கை பரப்புச் செயலாளரும் அம்பாறை மாவட்ட செயற்குழு தலைவருமான அப்துல் ரசாக் ஜவாத், கட்சியின் பிரதி தேசிய அமைப்பாளர் அஷ்ர.்.ப் தாஹீர், கட்சியின் சர்வதேச விவகாரங்களுக்கான பணிப்பாளர் ஐ.எல்.எம். மாஹீர், கட்சியின் பிரதிச்செயலாளர் நாயகம் அன்சில் அல்-அமீரி, முன்னாள் பிரதேச செயலாளர் ஏ.எல்.எம்.சலீம், முன்னாள் கிழக்கு மாகாண சுகாதார அமைச்சர் எம்.எஸ்.சுபைர் உட்பட கட்சியின் முக்கிய பிரமுகர்கள் இளைஞசர், யுவதிகள் பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

மேலும் இதன் போது பாரம்பரிய கலை, கலாசார நிகழ்வுகள், பாராட்டு நிகழ்வுகள் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.




**“இளைஞர் எழுச்சி மாநாடு”**







# குரங்கம்மை!

கொரோனா பாதிப்பிலிருந்து உலக நாடுகள் படிப்படியாக மீண்டு வருகின்ற இந்நிலையில் தற்போது குரங்கம்மை தொற்று ஐரோப்பிய நாடுகளில் பரவத் தொடங்கியுள்ளது. நாளுக்கு நாள் இதன் பாதிப்பு அதிகரித்து வருவதனால் உலகிலுள்ள மக்கள் அனைவரையும் அச்சுறுத்துகிறதா? என்ற எண்ணத்தையும் தோற்றுவித்துள்ளது.

கடந்த 2 ஆண்டுகளாக கொரோனா வைரஸ் தொற்றுக் காரணமாக உலகிலுள்ள நிறுவனங்கள் பகுதியாகவும், முழுமையாகவும் மூடப்பட்டதால் 330 கோடி மக்கள் வேலையிழந்துள்ளதாக ஐ.நாவின் ஆய்வு தெரிவிக்கின்றது.

முடங்கிய பொருளாதார நடவடிக்கைகள் தற்போது மீண்டும் முன்னேற்றம் அடைந்துவரும் இந்நிலையில், ஐரோப்பிய நாடுகளில் குரங்கம்மை நோய்த்தொற்று வேகமாகப் பரவி வருவது மக்களிடத்தில் பெரும் சவாலைத் தோற்றுவித்துள்ளது.

குரங்கம்மைத் தொற்று ஒரு அரியவகை நோயாகும். ஆபிரிக்காவின் சில பகுதிகளில் விலங்குகளிடமிருந்து மனிதர்களுக்கு பரவியது. 1958 ஆம் ஆண்டு, முதன் முதலில் ஆய்வகத்திலுள்ள குரங்குகளிடமிருந்து கண்டுபிடிக்கப்பட்டதன் காரணத்தினாலேயே இதற்கு குரங்கம்மையென அழைக்கப்பட்டது. 1970 ஆம் ஆண்டளவில் காங்கோ நாட்டில் முதன் முதலில் மனிதர்களில் கண்டுபிடிக்கப்பட்டது.

அதன் பின்னர், இந்தத் தொற்று 2017 இல் நைஜீரியா, கொங்கோ உள்ளிட்ட ஆபிரிக்க நாடுகளில் பரவியது. தற்போது இந்தப் பரவல் ஆபிரிக்கக் கண்டத்தைத் தாண்டி உலகெங்கும் பரவத் தொடங்கியுள்ளது. ஆகையால், இந்நோய் தொடர்பில் நாம் முன்னெச்சரிக்கையாக இருப்பதே சிறந்தது.

தற்போது மங்கி பொக்ஸ் எனப்படும் குரங்கு அம்மை குறித்த தகவல்கள் உலகெங்கும் பெரும் அச்சத்தை ஏற்படுத்தி வேகமாகப் பரவி வருகின்றன. இப்போது ஆபிரிக்காவில் 14,000 இற்கும் மேற்பட்டோருக்கு இந்நோய் கண்டறியப்பட்டுள்ளது.

அவர்களில் 524 பேர் உயிரிழந்துள்ளனர்.

இதில் 96 சதவீதமான பாதிப்புகள் மற்றும் இறப்புகள் கொங்கோவில் ஏற்பட்டுள்ளதாக அந்நாட்டுச் சுகாதாரத்துறை தெரிவித்துள்ளது. இது மேற்கு, மத்திய மற்றும் கிழக்கு ஆபிரிக்காவிலுள்ள 116 நாடுகளில் இந்தத் தொற்று பரவி வருகிறது. இதற்கு நடவடிக்கை எடுக்கவில்லை என்றால், குரங்கம்மை ஆபிரிக்க கண்டம் தாண்டியும் பரவும் அபாயம் இருப்பதாக எச்சரிக்கப்படுகிறது.

குரங்கம்மை தொற்று சின்னம்மையைப் போன்ற அரிய தொற்று நோயாகும். ஆனால் சின்னம்மையை விட அதன் தாக்கம் சற்றுக் குறைவாகக் காணப்படும். காய்ச்சல், தலைவலி, உடல்வலி, வீக்கம், முதுகுவலி, முகத்திலிருந்து தொடங்கி உடலுக்குப் பரவும் கொப்புளங்கள் போன்றவை இந்த நோயின் தொற்றுக்கான ஆரம்பகட்ட அறிகுறிகளாகும். காய்ச்சல் தொடங்கி மூன்று நாட்களுக்குள் முகத்தில் அரிப்பு ஏற்பட்டு பின்னர் கைகள்,



உள்ளங்கால்களுக்கு ஒவ்வாமை ஏற்பட்டு சிவப்பு நிறப்புள்ளிகள் தோன்றும். பின்னர் அவை கொப்புளங்களாக மாற்றமடைகிறது.

இந்த நோய்த்தொற்று பொதுவாக இரண்டு முதல் நான்கு வாரங்களுக்கு நீடிக்கும். பின்னர் தானாகவே மறைந்துவிடும். குரங்கம்மைக்கு

தனியானதொரு சிகிச்சை எதுவும் தற்போது இல்லை. இருப்பினும் பெரியம்மை தடுப்பூசிகள் இந்த வைரஸ் பரவுவதைத் தடுப்பதில் பெரிதும் பயனுள்ளவையாக நிரூபிக்கப்பட்டுள்ளன.

குரங்கம்மையை ஏற்படுத்தும் வைரஸ், தோலின் மேற்புறத்தில் உள்ள உடைந்த உயிர்கள் மூலமாகவும், சுவாசக் குழாய் மூலமாகவும், கண், காது, மூக்கு பகுதிகளில் உள்ள மியூகோஸ் திசுக்கள் மூலமாகவும், குரங்கம்மைத் தொற்றினால் பாதிக்கப்பட்ட விலங்குகளிடமிருந்தும், தொற்றினால் பாதிக்கப்பட்ட விலங்களை தொடுவதன் மூலமும், அதன் உடற்திரவங்கள் மூலமும் பரவுகிறதாக விஷேட பொது வைத்திய நிபுணர்கள் குறிப்பிடுகின்றனர்.

கொரோனா போன்று காற்றில் நீண்ட தூரத்திற்கு பரவாது. விரைவாகவும் பரவாது. அதாவது நோயாளியுடன் உட்கார்ந்து பேசும்போது சில நொடிகள் என்றாலே கொரோனா பரவும். ஆனால், மங்கி பொக்ஸ் இது போன்று பரவாது. பாதிப்பு ஏற்பட்டவருடன் நீண்டநேரம் தொடர்பில் இருப்பது, நோயாளியுடன் உடலுறவு வைத்துக்கொள்வது போன்ற காரணங்களால் மட்டுமே பரவும் என்றும் ஆய்வாளர்கள் கூறியுள்ளனர்.


ஒருவரிடமிருந்து மற்றொருவருக்கு எளிதில் பரவுவதில்லை. இருப்பினும் இந்த நோயினால் பாதிக்கப்பட்டவர் உபயோகப்படுத்திய ஆடைகள், துண்டு ஆகியவற்றை உபயோகிப்பதன் மூலம் மற்றவர்களுக்குப் பரவும் வாய்ப்புள்ளது. அதேபோன்று இந்நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் இருமும் போதும், தும்மும் போதும் வெளியாகும் நீர்த்துளிகள் மற்றவர்கள் மீது படுவதன் மூலமும் அல்லது அதை சுவாசிப்பதன் மூலமும் இந்த நோய் பரவும் அபாயம் உள்ளது. "மனிதர்களுக்கு மனிதர்கள் பரவுவது என்பது எச்சில், சளி மூலமாகவும், விலங்குகளிடம் இருந்து மனிதர்களுக்கு பரவுவது என்பது கடித்தலின் மூலமாகவும் பரவுகின்றது"

கொரோனா வைரஸ் தொற்றுடன் ஒப்பிடும்போது இந்நோயின் பரவல் ஒப்பீட்டளவில் குறைவாகக் காணப்பட்டாலும், நெருங்கிய தொடர்பின் மூலம் இந்நோய் இலகுவாகப் பரவக்கூடியது. ஆனால் மெதுவாக இது சமூகப் பரவலாக மாறக்கூடிய அபாயம் உள்ளது.

தற்போது இந்த குரங்கம்மை பாதிப்பிற்கு நிலையான சிகிச்சை முறை இல்லை. அதேநேரம் Bavarian Nordic நிறுவனத்தின் MVA-BN தடுப்பூசியை அமெரிக்கா, ஐரோப்பா மற்றும் கனடா நாடுகள் அங்கீகரித்துள்ளது. இதுதான் இப்போது முக்கியமான தடுப்பு மருந்தாக இருக்கிறது.

மேற்குறிப்பிடப்பட்ட அறிகுறிகள் யாருக்காவது தென்பட்டால் தாமதியாது உடனடியாக வைத்திய சிகிச்சையை பெற்றுக்கொள்ளுமாறு தொற்றுநோய் பிரிவு பொதுமக்களுக்கு அறிவுறுத்தியுள்ளது. இந்த நோயினால் பாதிக்கப்படுபவர்கள் முறையான சிகிச்சையை மேற்கொண்டால் ஒரு சில வாரங்களில் குணமடைந்துவிடலாம்.

குரங்கம்மைத் தொற்றுக்குள்ளான எந்த நோயாளர்களும் எமது நாட்டில் இதுவரை இனங்காணப்படவில்லை என்பது ஒரு மகிழ்ச்சியான செய்தியாக இருந்தாலும், இத்தொற்று நோய் பரவும் விடயத்தில் மிக அவதானமாக இருந்து கொள்வதுடன் அரசும், சுகாதாரத்துறையினரும் காட்டுகின்ற வழிகாட்டுதல்களுக்கமைய செயற்பட்டால் மாத்திரமே இந்நோயிலிருந்து எம்மையும், இளம் சமூகத்தினரையும் பாதுகாத்துக் கொள்ளலாம்.






மட்டு. துஷாரா

This Time in Sri Lanka!

ஸ்கை தமிழ் ஊடக வலையமைப்பு (பிரைவேட்) லிமிடெட்
Sky Tamil Media Network (Pvt) Ltd
ස්කයි ටැමිල් මීඩියා නෙට්වර්ක් (ප්‍රයිවට්) ලිමිටඩ්

sky தமிழ் Media Network
Reg No: PV 00249082

துணிந்தெழு

sky தமிழ் AWARDS SRI LANKA -2024-

# இலங்கை ஆளுமைகளை கௌரவிக்கும் ஸ்கை தமிழ் விருது – 2024

## NOMINATIONS NOW OPEN !

### விருது வகைகள்:

- ஊடகம் மற்றும் பத்திரிகை
- இலக்கியம்
- சமூக ஊடகங்களில் செல்வாக்கு செலுத்துபவர்
- கலை / கலாச்சாரம்
- விளையாட்டுத்துறை
- சமூக சேவை
- வணிகம் / தொழில்முனைவோர்
- கல்வி / தொழில்நுட்பம்
- விவசாயம்
- சிறப்பு விருது



**APPLY NOW**

விண்ணப்பங்களை அனுப்புவதற்கான இறுதித் திகதி 31 ஆகஸ்ட் 2024

skytamilawards

இன்றே உங்கள் விண்ணப்பங்களை எமக்கு அனுப்பி வையுங்கள்.

Visit our website: www.awards.skytamilnews.com

OFFICIAL PRINT MEDIA PARTNER : தினகரன் வாரமஞ்சரி

SUPPORTING PARTNER

CEYLON MEDIA FORUM

DIGITAL MEDIA PARTNER

Metro லீடர் மெட்ரோ LEADER
தமிழ் பேசும் மக்கள் 'நமக்கான நாளிதழ்'

SPORTS லீடர்
sportsml77@gmail.com

# பங்களாதேஷ் மகளிர் அணி இலங்கை வருகை



மட்டுப்படுத்தப்பட்ட ஓவர் கிரிக்கெட் தொடர்களில் விளையாடுவதற்காக பங்களாதேஷ் ஏ மகளிர் அணி அடுத்த மாதம் இலங்கை சுற்றுப்பயணம் மேற்கொள்ளவுள்ளது.எதிர்வரும் செப்டெம்பர் 5ஆம் திகதி இலங்கை வரும் பங்களாதேஷ் ஏ மகளிர் அணி இலங்கை ஏ அணியுடன் செப்டெம்பர் 8 மற்றும் 10 ஆம் திகதிகளில் இரண்டு ஒருநாள் போட்டிகளில் விளையாடவுள்ளது. இந்தப் போட்டிகள் முறையே பனாகொட, இராணுவ மைதானம் மற்றும் கொழும்பு, தர்ஸ்டன் மைதானங்களில் நடைபெறவுள்ளன. தொடந்து இரு அணிகளும் ஐந்து போட்டிகளைக் கொண்ட டி20 தொடரில் விளையாடவுள்ளன.

# மட்டக்களப்பு திருகோணமலை கிரிக்கெட் சமர்

**–அஸ்ஹர் இப்றாஹிம்–**

திருகோணமலை ஆர்.கே.எம்.ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி கல்வி சமூகம் 29 வது தடவையாக ஒழுங்கு செய்துள்ள திருகோணமலை ஆர்.கே.எம்.ஸ்ரீ கோணேஸ்வரா இந்து கல்லூரிக்கும், மட்டக்களப்பு ,கல்லடி சிவானந்தா தேசிய கல்லூரிக்கும் இடையிலான கிறிக்கட் சமர் இன்று 31 ஆம் திகதி சனிக்கிழமை திருகோணமலை ஆர்.கே.எம்ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது. திருகோணமலை இந்து கல்லூரி அதிபர் எஸ்.கணேசலிங்கம் தலைமையில் இடம்பெறவுள்ள சமரில் கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பிரதம பொறியியலாளர் கே.சிவகுமார் பிரதம அதிதியாகவும், திருகோணமலை கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் என்.பரமேஸ்வரன் கௌரவ




அதிதியாகவும், சிறுவர் கல்வி உதவிகள் அமைப்பின் சர்வதேச இணைப்பாளர் எஸ்.கங்காதரன் மற்றும் கனடா CED கிங் குறூப் பணிப்பாளர் பெஞ்சமின் லோரன்சுப்பிள்ளை ஆகியோர் விசேட அதிதிகளாகவும் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

# மன்னார் மூர் சுப்பர் லீக்






மன்னார் மூர் விளையாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற மூர் சுப்பர் லீக் SEASON -05 உதைப்பந்தாட்ட போட்டியின் இறுதிநாள் நிகழ்வு மன்னார் அல் – அஸ்ஹர் தேசிய பாடசாலை மைதானத்தில் கழகத்தின் தலைவர் இம்சாத் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வுக்கு அகில இலங்கை மக்கள் காங்கிரசின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு வெற்றிபெற்ற அணிகளுக்கான வெற்றிக் கிண்ணங்களினை வழங்கிவைத்தார்.

# சொறிக்கல்முனை உதைப்பந்தாட்ட சுற்றுப்போட்டி

**–க. டினேஸ்–**

சொறிக்கல்முனை எல்மோ விளையாட்டு மைதானம் புரனமைக்கப்பட்டு ஏற்பாடு செய்த உயிர்நீத்த உறவுகளின் ஞாபகார்த்தமாக உதைப்பந்தாட்ட சுற்றுப்போட்டி எல்மோ விளையாட்டுக்கழக தலைவர் மைக்கேல் மரியதாஸ் தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கவீந்திரன் கோடீஸ்வரன், விசேட அதிதி முன்னாள் நாவிதன்வெளி பிரதேச சபை தவிசாளர் அ. சுதர்சன், சொறிக்கல்முனை திருச்சிலுவை திருத்தல பங்குத்தந்தை ஜீனோ சுலக்சன் அடிகளார், அருட்தந்தை யோ. சுதர்சன் (கிளரீசியன் சபை), ஹொலிக்குறோஸ் மகா வித்தியாலய அதிபர் அருட்சகோதரி ம. சிறியபுஸ்பம், பொருளாதார உத்தியோகத்தர் தர்மலிங்கம் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.







## அம்பிளாந்துறை கலைமகள் பாடசாலை

# தேசிய மட்டத்திற்கு தெரிவு





**–அஸ்ஹர் இப்றாஹிம்–**

கிழக்கு மாகாண மட்ட விளையாட்டு போட்டியில் பெண்களுக்கான காற்பந்தாட்ட போட்டியில் மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்திற்குட்பட்ட அம்பிளாந்துறை கலைமகள் மகா வித்தியாலய 20 வயதிற்குட்பட்ட பெண்கள் அணி முதலாமிடத்தைப் பெற்று சம்பியனானது. 17 வயதிற்குட்பட்ட பெண்கள் அணி மூன்றாவது இடத்தினையும் பெற்றுள்ளனர். 20 வயதிற்குட்பட்ட மற்றும் 17 வயதிற்குட்பட்ட இரு அணிகளும் தேசிய மட்ட போட்டிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இப்பத்திரிகை இல.502,பிரதான வீதி, சாய்ந்தமருது -14யில் அமைந்துள்ள மெற்றோ மீடியா நெற்வேர்க் நிறுவனத்தில் 2024.08.31ம் திகதி அச்சிட்டுப்பிரசுரிக்கப்பட்டது.